# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8074787

C

1. District மாவட்டம் : Chennai PS காவல்நிலையம்: V&AC/HQ Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 13 Date நாள்: 26.07.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 23.7.2021 Date to : நாள் வரை 24.07.2021

Time Period : நேர அளவு Time from நேரம் முதல்: 12.00 Hrs Time to : நேரம் வரை 13.30 Hrs

(b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 26.07.2021 Time நேரம் 17.00 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 26.07.2021 Time நேரம் :17.30 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: 23 KM North

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address முகவரி : O/o Sub-Registrar, Madhavaram, Chennai-60

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : M.Samiulla Khan (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் : Mahaboob Khan

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : 15.6.1980 (d) Nationality நாட்டினம் : Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் : Advocate (g) Address முகவரி : No.14, Vivekanandar 3rd Cross Street, Pallikkaranai, Chennai-100

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. Krishnamurthy, Sub-Registrar, Madhavaram, Chennai-60.
2. Tr. Sudhakar

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

— FIR Contents attached in Separate sheets —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S. Malarkodi Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
26/7/21

15. Date & Time of despatch to the court: 27.07.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. MALARKODI
Rank: நிலை Inspector of Police, No. VEAC. SIC.

சமர்பிக்கப்படுகிறது.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையக குற்ற எண். பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 2018 (திருத்தம்) வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12ன் தொடர்ச்சி பின்வருமாறு

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலானய்வு பிரிவு ஆய்வாளர் S.மலர்கொடி ஆகியநான் இன்று 26-07-2021ஆம் தேதி மாலை 17.00 மணியளவில் பணியில் இருந்தபொழுது திரு.சமியுல்லா கான், S/o.மஹபூப்கான், எண் 14, விவேகாநந்தர் 3வது குறுக்கு தெரு, பள்ளிக்கரணை, சென்னை-600 100 என்பவர் அலுவலகம் ஆஜர் ஆகி என்னிடம் எழுத்து பூர்வமான புகார்மனு ஒன்றை அளித்தார். அவர் அளித்த புகார் மனு பின்வருமாறு:- அனுப்புநர்:- சமியுல்லா கான்.எம், த/பெ.மஹபூப்கான் எண்:14, விவேகாநந்தர் 3வது குறுக்கு தெரு, பள்ளிக்கரணை, சென்னை-600 100. பெறுநர்:- ஆய்வாளர் அவர்கள், லஞ்சஒழிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. ஐயா, நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகின்றேன். நான் வழக்குறைஞராக புதுடில்லியில் பயிற்சி செய்து வருகிறேன். தற்போது Ph.D படித்து வருகிறேன். என்னுடைய அக்கா மகளின் மாமனார் திரு.சையத் ஹபிப் மற்றும் மாமியார் திருமதி. நசிமா பேகம் அவர்கள் இரண்டு பேர் மீதும் உள்ள சொத்து பிளாட் நெம்பர்.1, தேவகி நகர், பகுதி-3, மாதவரம், சென்னையில் உள்ளது. அவர்கள் இரண்டுபேர் மீது உள்ள மேற்படி சொத்தை திரு.சையத் ஹபிப் அவருடைய பாகத்தை தனது மனைவி திருமதி.நசிமா பேகம் அவர்களுக்கு கொடுக்க விரும்பினார். அதற்காக உறவினர் என்ற முறையில் என்னை அழைத்து மேற்படி விவரத்தை கூறி தனக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டார். நான் அவர்களுடைய பத்திரத்தை வாங்கி படித்து அதற்கு ‘Release Deed’ வரைவு செய்து மேற்படி சொத்தை மாதவரம் சார் பதிவாளர் அலுவலத்தில் முத்திரை தாள் ரூ.16,000/-க்கும். மேலும் பதிவு கட்டனம் ரூ.4,000/- கணினிக்கட்டணம் ரூ.200/-மற்றும் 200 குறுந்தகடு கட்டணம் ரூ.100 மொத்தம் ரூ.4,300/-யை செலுத்தி இரசிது எண். 5122/2021 பெறப்பட்டு கடந்த 08.07.2021 அன்று பத்திர பதிவு செய்தேன். என்னுடைய பத்திரம் சம்மந்தமாக 23-07-2021 அன்று பகல் சுமார் 12 மணியளவில் சார் பதிவாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களை அணுகி கேட்டேன். அவர் என்னிடம் சொத்து சம்ந்தமாக பழைய ஆவணங்களை கேட்டு அதனை அவர் பார்வையிட்டு ஆவணத்தில் உள்ள ரசீதில் பென்சீலால் 10 என எழுதி அவருக்கு எதிரே இருந்த நபரை சென்று பார்குமாறு கூறினார். நான் எதிரே இருந்த நபரை சென்று பார்த்த பொழுது அவர் என்னிடம் இருந்த ஆவணத்தை வாங்கி பார்த்து விட்டு சார் பதிவாளர்

எழுதியுள்ள 10 என்பதை பார்த்து விட்டு என்னிடம் சார் பதிவாளர் ரூ.10,000/- எழுத்தியிருபதாகவும் அதை கொடுக்குமாறு என்னிடம் கேட்டார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் சரி நான் நாளை 24-07-2021 அன்று உங்களுடைய மாதவரம் இடத்தை ஆய்வு செய்ய வரும்போது வாங்கிக்கொள்வதாக தெரிவித்தார். நான் அவர் பெயர் சுதாகர் என்று பின்னர் கேட்டுதெரிந்துக்கொண்டேன். நான் பதிவு செய்த பத்திரம் திரும்ப பெற தயாரக உள்ளதென்று 23-07-2021 அன்று மாலை குறுஞ்செய்தி (SMS) வந்தது. 24-07-2021 பகல் சுமார் 1.30 மணியளவில் மேற்படி இடத்திற்கு வந்து பார்த்து விட்டு மேற்படி இடத்திற்கு சரியான மதிப்பீடு செய்து பத்திரம் செய்துள்ளதாக தெரிவித்து SRO கேட்ட பணத்தை என்னிடம் கேட்டார். நான் ரூ.10,000/-லிருந்து குறைத்துக்கொள்ளுமாறு கேட்டேன். அதற்கு அவர் Document Release செய்தபிறகு குறைத்துகேட்டால் எப்படி சார் SRO கோபித்துக்கொள்வார் என்று சொன்னார். நான் தற்போது பணம் இல்லை திங்கள்கிழமை காலை வருவதாக சொன்னேன் அதற்கு அவர் திங்கள்கிழமை வேண்டாம் என்றும் செவ்வாய்கிழமை (27-07-2021) அன்று அலுவலகத்தில் வந்து பணம் கொடுத்து விட்டு பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கூறி சென்று விட்டடர். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் என்னிடம் லஞ்சம் கேட்ட சார் பதிவாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அங்கு வேலை செய்யும் திரு.சுதாகர் ஆகிய இருவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (Sd.XXX) Samiulla Khan 26/07/21

Sir,

The above complaint was received on 26.07.2021 at 17.00hrs and after getting concurrence conducted discreet verification and upon permission, registered a case in V&AC, HQtrs, Cr.No.13/AC/2021/HQ, u/s 7 of Prevention of Corruption ( Amendment) Act 2018 on 26.07.2021 at 17.30 hrs.

(S.MALARKODI)
Inspector of Police,
Vigilance and Anti- Corruption,
Special Investigation Cell,
Chennai-16.